

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்

முதலாயிரம்

பெரியாழ்வார் திருமொழி

நான்காம்பத்து

2-ஆம் திருமொழி - அலம்பாவெருட்டா

_______*________

* அலம்பாவெருட்டாக் கொன்றுதிரியும்அரக்கரை *
குலம்பாழ்படுத்துக் குலவிளக்காய்நின்றகோன்மலை *
சிலம்பார்க்கவந்து தெய்வமகளிர்களாடும்சீர் *
சிலம்பாறுபாயும் தெந்திருமாலிருஞ்சோலையே. (1)

வல்லாளந்தோளும் வாளரக்கன்முடியும் * தங்கை
பொல்லாதமூக்கும் போக்குவித்தான்பொருந்தும்மலை *
எல்லாவிடத்திலும்எங்கும்பரந்து பல்லாண்டொலி *
செல்லாநிற்கும்சீர்த் தெந்திருமாலிருஞ்சோலையே. (2)

தக்கார்மிக்கார்களைச் ச்ஞ்சலம்செய்யும்சலவரை *
தெக்காநெறியேபோக்குவிக்கும் செல்வன்பொன்மலை *
எக்காலமும்சென்று சேவித்திருக்கும்அடியரை *
அக்காநெறியைமாற்றும் தண்மாலிருஞ்சோலையே. (3)

ஆனாயர்கூடி அமைத்தவிழவை * அமரர்தம்
கோனார்க்கொழியக் கோவர்த்தனத்துச்செய்தான்மலை *
வானாட்டில்நின்று மாமலர்க்கற்பகத்தொத்திழி *
தேனாறுபாயும் தெந்திருமாலிருஞ்சோலையே. (4)

ஒருவாரணம் பணிகொண்டவன்பொய்கையில் * கஞ்சந்தன்
ஒருவாரணம் உயிருண்டவன்சென்றுறையும்மலை *
கருவாரணம் தன்பிடிதுறந்தோட * கடல்வண்ணன்
திருவாணைகூறத்திரியும் தண்மாலிருஞ்சோலையே. (5)

ஏவிற்றுச்செய்வான் ஏன்றெதிர்ந்துவந்தமல்லரை *
சாவத்தகர்த்த சாந்தணிதோள்சதுரன்மலை *
ஆவத்தனமென்று அமரர்களும்நன்முனிவரும் *
சேவித்திருக்கும் தெந்திருமாலிருஞ்சோலையே. (6)

மன்னர்மறுக மைத்துனன்மார்க்குஒருதேரின்மேல் *
முன்னங்குநின்று மோழையெழுவித்தவன்மலை *
கொன்னவில்கூர்வேற்கோன் நெடுமாறந்தென்கூடற்கோன் *

தென்னன்கொண்டாடும் தென்திருமாலிருஞ்சோலையே. (7)

குறுகாதமன்னரைக் கூடுகலக்கி * வெங்கானிடைச்
சிறுகால்நெறியேபோக்குவிக்கும் செல்வன்பொன்மலை *
அறுகால்வரிவண்டுகள் ஆயிரநாமம்சொல்லி *
சிறுகாலைப்பாடும் தென்திருமாலிருஞ்சோலையே. (8)

சிந்தப்புடைத்துச் செங்குருதிகொண்டு * பூதங்கள்
அந்திப்பலிகொடுத்து ஆவத்தனம்செய்அப்பன்மலை *
இந்திரகோபங்கள் எம்பெருமான்கனிவாயொப்பான் *
சிந்தும்புறவில் தென்திருமாலிருன்சோலையே. (9)

எட்டுத்திசையும் எண்ணிறந்தபெருந்தேவிமார் *
விட்டுவிளங்க வீற்றிருந்தவிமலன்மலை *
பட்டிப்பிடிகள் பகடுரிஞ்சிச்சென்று, மாலைவாய்த் *
@ தெட்டித்திளைக்கும் தென்திருமாலிருஞ்சோலையே. (10)

* மருதப்பொழிலணி மாலிருஞ்சோலைமலைதன்னை *
கருதியுறைகின்ற கார்க்கடல்வண்ணனம்மாந்தன்னை *
விரதம்கொண்டேத்தும் வில்லிபுத்தூர்விட்டுசித்தன்சொல் *
கருதியுரைப்பவர் கண்ணன்கழலிணைகாண்பர்களே. (11)

அடிவரவு : அலம்பா வல்லாளன் தக்கார் ஆனாயர் ஒரு ஏவிற்று மன்னர் குறுகாத சிந்த எட்டு மருத உருப்பிணி.

@ தெட்டல் - முற்றல்